முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் நாள், வியாழக்கிழமை
IA.No.1/2024
இன்
RCOP No.7/2018
-----

1) ராஜேந்திரன்
2) பசும்பொன் ... மனுதாரர்/ வாடகைதாரர்கள்

/ எதிர்/

1) தங்கப்பாண்டியன் (இறப்பு)
2) வினோத்குமார் (இறப்பு) ... எதிர்மனுதாரர்/உரிமையாளர்கள்

3) விஜயன் ... எதிர்மனுதாரர்/உத்தேச எதிர்மனுதாரர்

இம்மனுவானது 11.12.2025ம் தேதி இன்று என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாடகைதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.குமரகுருபரன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/உத்தேச எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது கோவிலை தற்போது நிர்வாகம் செய்து வரும் இந்த நிர் எதிர்மனுதாரர்/உத்தேச எதிர்மனுதாரரை வழக்கில் தரப்பினராகச் சேர்க்க உத்திரவிட வேண்டி மனுதாரர்கள்/வாடகைதாரர்கள் தரப்பில் கட்டளை 1 விதி 10(2) மற்றும் விதி 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>** :

2.1) அசல் மனுவானது கடந்த 2018ம் ஆண்டு தாக்கல் செய்து, தாவா கடைக்கான வாடகை தொகையை மனுதாரர்கள் சமூகம் நீதிமன்றத்தில் மாதந்தோறும் தொடர்ந்து வைப்பீடு செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்கள்/வாடகைதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள்/வாடகைதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் மனுவில் 3ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என்று மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

3. இந்த மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

4. இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், எதிர்மனுதாரரை RCOP No.7/2018ல் உத்தேச எதிர்மனுதாரராக சேர்க்கப்பட வேண்டுமா என்பதே ஆகும். இந்த மனுவானது கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. அசல் மனுவானது 05.07.2018ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, தாவா சொத்து திருமங்கலம் டவுன், கூழையாபுரம் இந்து பறையர்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ காளியம்மன் கோவிலுக்குப் பாத்தியப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதி கூழையாபுரத்தைச் சேர்ந்த இந்து பறையர்களுக்கு ஊர் நாட்டாமை என்றும், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் மற்றும் கோவில் நிர்வாகஸ்தர் என்றும், திருமங்கலம் டவுன், கூழையாபுரம் இந்து பறையர்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ காளியம்மன் கோவிலுக்குப் பாத்தியப்பட்ட தாவா வழக்கிடை சொத்தான கடையினை வாடகை ஒப்பந்த அடிப்படையில் மனுதாரர் பெற்று தேநீர் கடை வைத்து நடத்தி வருவதாகவும், தாவா சொத்திற்கான வாடகையை எதிர்மனுதாரர்கள் பெற மறுத்ததால், கடை வாடகை தொகை மனுதாரர்கள் நீதிமன்றத்தில் மாதந்தோறும் தொடர்ந்து வைப்பீடு செய்ய அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மேலும், தாவா மனு நிலுவையில் உள்ள நிலையில், கடந்த 15.02.2021ம் தேதியில் மேற்படி 2ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்டார் என்றும், அதற்கு சீர்திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்த நிலையில்,

இந்த நிர் 1ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்டார் என்றும், தாவா வழக்கினை 1ம் எதிர்மனுதாரர் கோவில் நாட்டாமை என்ற வகையில் நடத்தி வந்த நிலையில், தற்போது அவரது சகோதரரான விஜயன் என்பவர் மேற்படி கோவில் நாட்டாமை என்ற வகையில் செயல்பட்டு வருகிறார் என்றும், எனவே தாவா மனுவினைப் பொறுத்து தற்போது கோவிலை நிர்வாகம் செய்யும் நபர் என்ற வகையில் இந்த நிர் எதிர்மனுதாரர்/உத்தேச எதிர்மனுதாரராக வழக்கில் தரப்பினராக சேர்த்து அவரையும் கட்டுப்படுத்தி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பெற வேண்டியது அவசியமாக உள்ளது என்று மனுதாரர் தரப்பு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. அசல் மனுவில் 1, 2 எதிர்மனுதாரர்கள் திருமங்கலம் டவுன், கூளையாபுரம் இந்து பறையர்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ காளியம்மன் கோவில் நிர்வாகஸ்தர்கள் என்ற நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஆனால், இம்மனுவில் 1, 2, 3 எதிர்மனுதாரர்களை கோவில் நிர்வாகஸ்தர்களாக குறிப்பிடப்படவில்லை. மேலும், அசல் மனுவில் 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில், 1ம் எதிர்மனுதாரர் கோவில் நாட்டாமை என்ற வகையில் அசல் மனுவை நடத்தி வந்த நிலையில், தற்போது அவரது சகோதரரான விஜயன் என்பவர் கோவில் நாட்டாமை என்பதை நிரூபணம் செய்யக்கூடிய ஆவணங்கள் எதுவும் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, மனுதாரர்/வாடகைதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படியாக வடிவமைக்கப்படவில்லை. அசல் மனுவில் எதிர்மனுதாரர்/உத்தேச எதிர்மனுதாரரை ஒரு தரப்பினராக சேர்ப்பது சட்டப்படியானது, நியாயப்படியானது என்று மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 26.02.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.02.26 17:07:55 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

<u>**இணைப்பு**</u> :

1. <u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி**</u> : இல்லை
2. <u>**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**</u> : இல்லை
3. <u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**</u> : இல்லை
4. <u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**</u> : இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.02.26 17:08:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

I.A.No. 1/2024
in
RCOP.No.7/2018
Order
D.D. 26.02.2026